பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 23 புதன்கிழமை (07-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 172

# கிளிநொச்சியை நோக்கி முன்னேற படைகள் தொடர்ந்தும் கடுஞ் சமர்!

## புலிகளின் எதிர்ப்பும் உக்கிரம்

கொழும்பு, ஓகஸ்ட் 7

"உண்மை வெற்றி" இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து ஆனையிறவிலிருந்து பரந்தன் வரை நகர்ந்த ஸ்ரீலங்கா அரசுத்துருப்புகள் அங்கிருந்து கிளிநொச்சியை நோக்கி முன்னேறுவதற்காக நேற்று மூன்றாவது நாளாகக் கடுஞ் சமர் புரிந்தன.

முன்னேறமுயலும் துருப்புகளுக்கு எதிராக விடுதலைப் புலிகளின் எதிர்ப்பும் தீவிரமாக இருந்ததாகக் கூறப்படுகின்றது.

படையினர் முன்னேற முயலும் பிரதேசங்களில் கடும் சண்டை நடைபெறுவதை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகமும் நேற்று உறுதி செய்தது.

புலிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் படையினர் தொடர்ந்து முன்னேறுவதாக நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள், றொக்கட் மூலம் செலுத்தப்படும் குண்டுகள், கிரனேட்டுகள் மற்றும் சிறிய ஆயுதங்களைக் கொண்டு பலமாக எதிர்த்தும் —

கண்ணிவெடிகள், மிதிவெடிகள் போன்றவை மூலம் தாக்குதல்கள் நடத்தியும் —

புலிகள் சமர் புரிந்து வருவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இதுவரை எவரும் கைதாகவில்லை

கொழும்பு, ஓக. 7

அனுராதபுரம் ஸ்ரீ மகா போதியில் ஜனாதிபதியின் பாதுகாவலர் சுடப்பட்ட சம்பவம் குறித்து இதுவரை எவரும் கைதாக வில்லை.

முந்நூறு மீற்றர் தூரத்திலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது என்றும் —

இதற்கானகாரணம் தெரியவில்லை என்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரி

(6 ஆம் பக்சம் பார்க்க)

## முறிகண்டியில் குண்டு வீச்சு இருவர் பலி

லண்டன், ஓக. 7

முறிகண்டிப் பகுதியில் நேற்று முன்தினம் குண்டு வீச்சு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பத்மராணி, விஜயராணி என்ற இரு இளம்பெண்கள் இந்தக் குண்டு வீச்சில் உயிரிழந்ததாகவும் கூறப்பட்டது.

(உ-3)

## உணவு லொறிகளுக்கு இன்னும் அனுமதி இல்லை

### சாந்தசோலையில் தவம் கிடக்கின்றன

லண்டன், ஓக. 7

வவுனியாவில் இருந்து உணவுப் பொருள்களைக் கிளிநொச்சி, முல்லைலத்தீவுப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லும் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

உணவுப் பொருள்களை எடுத்துவர கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வவுனியா எல்லையான சாந்தசோலைக்குச் சென்ற லொறிகள் இன்னமும் அங்கேயே தங்கியுள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

வடக்கே உணவு அனுப்புவதற்கான அனுமதிக்காக தாம் காத்திருப்பதாகவும் —

அனுமதி கிடைத்ததும் லொறிகளில் ஏற்றி அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் என்றும்— வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்

அதேசமயம் கிளிநொச்சியி

(6 ஆம் பக்கம் பார்க்க )

## நொச்சிமோட்டை பகுதியில் புலிகள்-படையினர் மோதல்

கொழும்பு, ஓக. 7

வவுனியாவுக்கு சுமார் எட்டு கிலோ மீற்றர் வடக்கே நொச்சி மோட்டையில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது

இம் மோதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் —

விடுதலைப் புலிகள் தரப்பில் கொல்லப்பட்ட இருவரின் சடலங்களை படையினர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் புலிகளிடம் ஒப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை எதிர்பார்த்து வவுனியாவில் ஏற்பாடு

### ஆனால் எவரும் வரவில்லையாம்

லண்டன், ஓக. 7

கிளிநொச்சிப் பகுதியிலிருந்து அகதிகள் வருவார்கள் என்று வவுனியாவில் பெரிய எடுப்பில் பணிகள் மேற்கொண்டுள்ள போதும்—

நேற்றுவரை அகதிகள் எவரும் வவுனியாவுக்கு வரவில்லை என்று வவுனியாசெய்திகள் தெரிவித்தன.

அகதிகள் தங்குவதற்காக வவுனியாவில் 35 பாடசாலைகள் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் எதிர்பார்க்கப்பட்டது போன்று அகதிகள் வந்துசேரவில்லை.

அகதிகள் இன்று வருவர், நாளை வருவர் என்று எதிர்பார்க்கப்படுவதாக வவுனியா

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தனது முன்னைய கடும்போக்கு நிலையை மாற்றி

# புலிகளுடன் பேசுவதுபற்றி அரசு ஆலோசிக்கின்றது!

### ஆங்கில வார இதழ் தகவல்

கொழும்பு, ஓக. 7

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தனது முன்னைய கடும்போக்கு நிலையிலிருந்து அரசு தற்போது மாறியிருக்கின்றது என்பதற்கும்—

பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றைக் காண்பது குறித்து புலிகளுடன் பேசுவது பற்றி அரசு மீண்டும் ஆலோசிக்கின்றது என்பதற்கும்—

தெளிவான சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

—"த சண்டே ரைம்ஸ்" பத்திரிகையில் அதன் அரசியல் செய்தியாளர் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்று இலங்கைக்கு உதவும் நாடுகள் அரசுக்கு அழுத்தம் போட்டிருக்கின்றன என்பது அரசு வெளிப்படுத்திய சமிக்ஞைகளிலிருந்து புலனாகியுள்ளது.

வடக்கில் ஒரு யுத்தத்தை கலம் நெடுகிலும் அரசினால் தொடர முடியாது என்று பொதுக் கூட்டம் ஒன்றில் அறிவித்ததன் மூலம் அமைச்சர் ஜி. எல். பீரிஸ் முதல் சமிக்ஞையை வெளியிட்டார்.

அதேசமயம் மலேசியாவில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை முகாமை வாபஸ்பெறுமாறு இராணுவ தளபதி கோரியிருந்தார்!

கொழும்பு, ஓக. 7

தாக்குதல் ஆபத்துக்கு இலக்காகக் கூடிய இடத்தில் முல்லைத்தீவு முகாம் அமைந்திருந்ததால் அதனை வாபஸ் பெறவேண்டும் என இராணுவத் தளபதி றோஹான் தலுவத்த ஏற்கனவே சிபார்சு செய்திருந்தார்.

ஆங்கில வார இதழ் ஒன்றில் அதன் அரசியல் செய்தியாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

"த சண்டே ரைம்ஸ்" பத்திரிகையில் அதன் அரசியல் செய்தியாளர் இந்த விடயம் குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முல்லைத்தீவு முகாம் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது என்பது இனிமேலும் இரகசியம் அல்ல. அந்த வீழ்ச்சியில் ஒரு சிறு எண்ணிக்கையினரே தப்பினர் என்பதும் இனி மேலும் இரகசியமாக இருக்க முடியாது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்த முல்லைத்தீவு முகாமில் அது தாக்குதலுக்கு உள்ளான சமயம், சுமார் 1400 பேர் இருந்தனர். ஆனால் எத்தனை பேர் தப்பினர்?

சட்டத்தின்படி காணாமல் போன ஒருவர் தொடர்பாக அவர் காணாமல் போய் ஒரு வருடத்தின் பின்னரே மரணச் சான்றிதழ் வழங்கமுடியும் என்பதால்—

உயிரிழந்தவர்கள் குறித்துச் சரியாகக் கணக்கெடுத்து உத்தியோகபூர்வ எண்ணிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாதுவ வந்து சேர்ந்தது

வடமராட்சி, ஓக. 7

வாதுவ கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

பொருள்களை றக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(முன்வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில்)

# போரில் அரசியல் திருப்பம் ஏன் செய்யப்படக் கூடாது?

## ரணில் கேள்வி

கொழும்பு, ஓக. 7

''இந்த நாட்டின் இளைஞர்கள் மற்றும் பயிற்சிபெற்ற விரர்களை வீணாகப் பலியாக்கி விடக் கூடாது. சமீபத்திய தோல்வியை மறைத்து அரசு யாருடைய அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்ற முனைகின்றது? இந்த யுத்தத்தில் ஏன் ஓர் அரசியல் திருப்பம் செய்யப்படக் கூடாது?''

இவ்வாறு கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

குருநாகல் சந்திக்குப் பக்கத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் அங்கு மேலும் கூறியதாவது;

பொறுப்பற்ற அரசியல்வாதிகளின் முகங்களைக் காப்பாற்றும் பொருட்டு, அரசு இளம் சமுதாயத்தைப் பலியாக்கக் கூடாது. பொருளாதாரம் சீரழிந்து வருகின்றது; பங்குச்சந்தை வீழ்ச்சி கண்டுள்ளது; விவசாயத்தில் லாபமில்லை; உற்பத்திக் கைத்தொழில் சீர்குலைந்துள்ளது.

தமது பிரதிமையை வளர்த்துக் கொள்வதற்கு அல்லது அரசியல்வாதிகளின் புகழை வளர்த்துக் கொள்ள அரசாங்கம் யுத்தத்தை ஓர் ஆயுதமாகக் கருதக்கூடாது.

இது பொ. ஐ. மு. அரசுக்கு ஐ.தே.கவின் வேண்டுகோள் அல்ல. மக்கள் சார்பாகவும் படையினரின் குடும்பத்தவர்கள் சார்பாகவும் விடுக்கப்படும் ஒரு வேண்டுகோளாகும்.

பொ. ஐ மு பதவிக்கு வருவதுடன் நாட்டின் முன்னேற்றம் தளர்ச்சியுறும் என்பதை நாம் எப்போதும் அறிந்திருந்தோம். நாட்டுக்கு ஒரு சக்தி வாய்ந்த எதிரணி தேவை. ஆகவே நாட்டின் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்குமுகமாக ஐ தே. க தனது அமைப்பை மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறது.

நாடு அமிழ்ந்து கொண்டிருக்கிறது. பொருளாதாரம் பலமான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. இந் நாட்டின் ஒரே இயக்கம் யுத்தமாக இருக்கிறது. 12 மாதங்களில், இந்த 12 வருட யுத்தம் முற்றுப் பெறும் என அரசு பெருமை அடித்தது. யாழ்ப்பாணத்தைப் பிடித்ததுடன் பொய்ப் பிரசாரமும் வேகமாக வேலை செய்தது.

இப்பிரசாரத்தின் பின் முல்லைத்தீவு முகாம் அழிக்கப்பட்டது. சுமார் 1500 பேரில் ஆக 100 பேர் உயிர் தப்பியதாகக் கூறப்படுகிறது; சிலர் காணாமல் போயுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு படைவீரர் அல்லது பொலீஸார் அங்கு இல்லை. படையினரைப் பொறுத்த வரையில் சிவில் நிர்வாகம் அங்கில்லை.

### உயிரிழப்பு குறித்துக் கவலை

இந்திய அமைதி காக்கும் படை இருந்த போது 2 வருடங்களில், சுமார் 1,300 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் முல்லைத்தீவில், ஒரு வாரத்தில் 1405 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் காரணத்தினால்தான் இந்த யுத்தம் குறித்து முடிவு செய்யப்பட வேண்டும். இது புகழ்ச்சி பேசும் ஒரு நிலைமை அல்ல. மாறாக படையினருக்கு ஏற்பட்ட தோல்வி குறித்தும் உயிரிழப்புகள் குறித்தும் கவலை அடையும் நிலைமை.

போரில் 1990 - 94 காலப் பகுதியில் 2679 பேர் இறந்துள்ளனர்; 4555 பேர் காயமுற்றுள்ளனர். 1995 இல் 1454 பேர் இறந்துள்ளனர். 5036 பேர் காயமடைந்துள்ளனர். 1996 ஜூலையில் மட்டும் 1406 பேர் இறந்துள்ளனர்; 339 பேர் காயமடைந்துள்ளனர்.

நீர்வேலியில் படையினர் எதிரிகளை எதிர்த்திருக்கலாம் ஆனால் எல். ரி. ரி ஈ. கவனமாகத் தன்னை மீளமைப்புச் செய்து, முல்லைத் தீவு முகாமை அழித்துள்ளது.

அரசின் இந்த யுத்த யுக்தி தோல்வி கண்டிருக்கிறது. அரசியல் நோக்கங்களுடன் கூடிய பாசாங்கு யுத்தமிது. படையினரின் பலமான அம்சங்களையும் பலமற்ற அம்சங்களையும் மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக, குறுகிய அரசியல் அம்சங்களை வெற்றி பெறுவதற்கான துறையாக இது மாறிவிட்டது.

### பலியிடக்கூடாது

இந்த நாட்டின் இளைஞர்கள் மற்றும் பயிற்சி பெற்ற வீரர்களை வீணாக பலியாக்கி விடக்கூடாது. சமீபத்தைய தோல்வியை மறைத்து, அரசு யாருடைய அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்ற முனைகின்றது? இந்த யுத்தத்தில் ஏன் ஓர் அரசியல் திருப்பம் செய்யப்படக்கூடாது? ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களை இழந்து கவலை அடைகின்றன. அரசு உண்மை நிலையை எடுத்துக் கூற வேண்டும்.

முப்படையிலும் உள்ள வேற்றுமைகளைக் கூட்டு நடவடிக்கைத் தலைமையகம் நீக்க முடியும். அதிகாரிகளின் கருத்துக்களைச் செவிமடுக்க வேண்டும். அக்கருத்துக்களை பரிசீலிக்க வேண்டும். ஐ.தே.க. பதவியல் இருப்பின் இந் நடவடிக்கைகளை நாம் எடுத்திருப்போம்.

பொறுப்பற்ற அரசியல்வாதிகளின் முகங்களைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கம் இளைஞர்களைப் பலியாக்கக்கூடாது. பொருளாதாரம் சீரழிந்து கொண்டிருக்கிறது — என்றார்

(உ)

## கற்கை நெறி

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் உடற்கல்வியும் விளையாட்டுக்களும் எனும் அடிப்படைக் கற்கை நெறி இம்மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக் கழக செல்வநாயகம் மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

வார இறுதி நாள்களில் இரு மாதங்கள் இடம்பெறவுள்ள மேற்படி கற்கை நெறியின் முதற்தொகுதியில் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த கல்லூரிகளின் உடற்கல்வி, விளையாட்டுத்துறை சார்ந்த ஆசிரியர்களும், உயர்தர வகுப்பு மாணவர்களும் பயிற்சி பெறவுள்ளார்கள் என யாழ். பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகு இணைப்பாளர் திரு. இரா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ-4)

## குடும்ப நலசேவை பரீட்சை

குடும்பநலசேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் சடைப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இப்பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான பிரவேசப்பத்திரம் இன்னமும் வந்துசேரவில்லை.

எனினும் பரீட்சைத்தினத்துக்கு முன் கிடைக்கக் கூடியதாக, பிரவேசப்பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும் என கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)

# ஜனாதிபதிக்கு ஒதுக்கிய ஆசனம் அருகே நின்ற போதே சுடப்பட்டார்

## அநுராதபுரம் சம்பவம் குறித்து மேலும் தகவல்

கொழும்பு, ஓக. 7

அநுராதபுரம் ஸ்ரீ மகா போதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொள்ளவிருந்த சமய நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்துக்கு அருகில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தரே சூட்டுக்கு இலக்கானார் என்றுதற்போது தெரியவந்துள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கு ஜனாதிபதி சமுகமளிப்பதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பே இச்சம்பவம் இடம் பெற்றதால் அந்த வைபவத்தில் கலந்து கொள்ளாமல் ஜனாதிபதி கொழும்பு திரும்பினார் எனத் தெரிவிக்கப் பட்டது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்த சமயம் ஜனாதிபதி கலாவேவவில் கூட்டமொன்றில் சமுகமளித்திருந்தார் என்றும் —

இச்சம்பவம் தொடர்பாக புலன் விசாரணை மேற்கொள்ள பிரதிப் பொலீஸ் மா அதிபர் விக்டர் பெரேரா தலைமையில் உயர்மட்ட பொலீஸ் குழு ஒன்று அநுராதபுரம் சென்றுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு அதிகாரி ஒருவர் காயமடையச் செய்த இத் தாக்குதல் சுமார் 200 மீற்றர் தூரத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என நம்பப் படுகிறது.

இனந்தெரியாத இத்த துப்பாக்கி நபரை கண்டு பிடிக்க பொலீஸாரும், இராணுவத்தினரும் நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் கடுமையான தேடுதலில் ஈடுபட்டனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அதிகாரி தற்சமயம் கொழும்பில் சிகிச்சை பெற்று வருகிறார். (இ-6)

# பொது இடங்களில் திரியும் இளம் தம்பதியர்

## பொலீஸார் கண்காணிப்பராம்

கொழும்பு, ஓக. 7

பொது இடங்களில் திரியும் இளம் தம்பதிகள் மீது பாதுகாப்புப் பிரிவினர் கூடுதல் கவனம் செலுத்தவிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும், அரசாங்க கட்டடங்களிலும் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகப் பொலீஸ் தலைமையகம் கூறுகிறது.

இதனை அடுத்தே இளம் தம்பதியர் குறித்து கூடுதல் கண்காணிப்பு செலுத்தப்பட உள்ளது.

விடுதலைப் புலிகள் இளம் காதலர்களைப்போல நடித்து கொழும்பு நகரில் குண்டுவெடிப்புக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் —

ஏற்கனவே இத்தகைய நபர்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் — பொலீஸ் தலைமையகம் தெரிவிக்கிறது. (இ-3)

# தெய்வீக வாழ்க்கை பெற வழிகாட்டிய சிவானந்தர்

அகத்திலே இறைவனுடன் ஐக்கியப்பட்டு வாழும் வாழ்க்கையே இவ்வுலகிலே அடையப்பெறும் தெய்வீக வாழ்க்கையாகும். இறைவனுடன் ஐக்கியப்பட்டிருக்கும் நிலைமை நீங்கும் போது, உங்கள் வாழ்க்கை அமைதியின்றித் துன்பமயமானதாகின்றது. இழந்த இன்ப நிலைமையை அடைவதற்கு உதவுவதே தெய்வீக வாழ்க்கையின் நோக்கமாகும். உண்மையான சமயம் ஒவ்வொன்றின் நோக்கமுமாகும். மக்கட் பிறவியின் நோக்கம் இறைவனுடன் ஐக்கியப்பட்டு இன்பமனுபவிக்கும் இந்த வாழ்க்கையை அடைதலேயாம். —

இறைவனுள் ஐக்கியப்பட்டு இன்புறுவதற்கு நிச்சயமான மிகு இலகுவான வழியை இங்கே உங்களுக்குச் சொல்லுகின்றேன்.

கடவுளின் பிள்ளைகளே! கேளுங்கள்! கோயில்களில் மாத்திரம் கடவுளிருக்கிறார் என்று கருத வேண்டாம். அவர் எங்கும் வியாபகமாயிருக்கின்றார். ஒவ்வொரு உயிரின் அகத்திலும் அவர் வசிக்கின்றார். இறைவனுடைய ஒளி ஒவ்வொரு உயிரினிடத்தும் மறைந்திருக்கின்றது. ஆகையினாலே ஒவ்வொரு உயிரினிடத்தும் இறைவனைத் தரிசிக்கப்பழகுங்கள் நீங்களே இறைவன் எழுந்தருளியிருக்கும் நடமாடும் திருக்கோயிலாயிருக்கின்றீர்கள் —

இறைவனை இவ்வாறு தரிசிப்பதற்குச் சாதகமாகுமாறு, நீங்கள், தூயவர்களாய் சத்தியசீலர்களாய் தாழ்மை, அன்பு, இரக்கம், உடையவர்களாய் வாழுங்கள். இந்நடமாடும் திருக்கோயிலைப் புனிதமாய் வைத்திருங்கள். அப்படிச் செய்யும் பொழுது இறைவனது ஒளியை உள்ளே காண்பீர்கள். அப்படிக் காணும் பொழுது மனத்தாலும், காயத்தாலும் மற்றவர்களும் தெய்வீக வாழ்வு வாழ நீங்கள் இயல்பாகவே ஊக்குவித்து நிற்பீர்கள். அப்பொழுது எல்லையில்லாப் பேரின்பம் உங்களுடையதாகும்.

அன்பர்களே, இத்தன்மையதாகிய தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து நீங்கள் என்றென்றும் இன்புற்றிருப்பீர்களாக. இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக எல்லா நலன்களையும் உங்களுக்கு அருளுவாராக—

இவ்வாறு அருளியவர் சுவாமி சிவானந்தர்.

இந்நிலையை உலகெலாம் அடையவேண்டும் என்று கருதியே சுவாமி அவர்கள் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தை உண்டாக்கி, அதன் மூலம் மக்களைத் தெய்வீக வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றார்.

தெய்வீக வாழ்க்கைச் சங்கம் நிறுவப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியாகி அதன் வைர விழா உலகெங்கும் இவ்வருடம் கொண்டாடப்படுகிறது.

சுவாமி சிவானந்தர் அவர்களின் 33ஆவது புண்ணிய திதி ஆராதனை இன்று ஏழாம் திகதியும், 109 வது பிறந்த தினம் அடுத்த மாதம் எட்டாம் திகதியும் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் பூசை, பிரார்த்தனை, பஜனை, சொற்பொழிவுகளுடன் கொண்டாடப்படும்.

சி. கனகரத்தினம்
தலைவர், யாழ். திவ்விய ஜீவன சங்கம்.

# நோயாளருக்கான கப்பல் சேவையை ஆரம்பிக்க இன்னும் அனுமதி இல்லை

## செஞ்சிலுவை அநுராதபுரத்தில் கிளினிக் ஆரம்பிக்கும்

கொழும்பு ஓக. 7

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு மீண்டும் நோயாளர் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான அனுமதி பாதுகாப்பு அமைச்சிடமிருந்து இன்னும் கிடைக்கவில்லை.

நோயாளர் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுமதியை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பாதுகாப்பு அமைச்சிடம் கோரியது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அதற்கு இது வரை பதில் இல்லை என்று செஞ்சிலுவைச் சர்வதேச குழு அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்தனர் என்று சண்டே ரைம்ஸ் ஆங்கில வாரஇதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சிவிலியன்களுக்காக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அநுராதபுரத்துக்கு சமீபமாக நிரந்தரமான கிளினிக் ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டு வருவதாகவும்-

இதற்கான காணி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டது.

(இ)

# காவிரி தண்ணீர் பங்கீடு குறித்து தமிழ் நாடு - கர்நாடகம் இணக்கம்

## கருணாநிதி - பட்டேல் மீண்டும் சந்திப்பர்

சென்னை, ஓக. 7

தமிழ் நாடும், கர்நாடகமும் காவிரி நீரை இருமாநிலங்களின் விவசாயிகளின் நலனுக்கு குந்தகம் இன்றிப் பகிர்ந்து கொள்வதென முடிவு செய்துள்ளன.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

கர்நாடக முதலமைச்சர் ஜே. எச். பட்டேல் சென்னையில் செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில், இரு மாநிலங்களின் தேவைகளை இந்த இடைக்கால ஏற்பாடு கருத்தில் கொண்டுள்ளதாகக் கூறினார்.

தமக்கும் கர்நாடக முதலருக்கும் இடையிலான பேச்சுக்கள் ஒழிவுமறைவின்றி திட்டவட்டமாக விட்டுக்கொடுக்கும் உணர்வுடன் நடைபெற்றதாக அவர் சொன்னார்.

மேலும் பேச்சு நடத்துவதற்கு திரு. பட்டேல் தம்மை பங்களூருக்கு அழைத்திருப்பதாக கருணாநிதி சட்டப்பேரவையில் கூறினார்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு பின்னர் பங்களூர் செல்ல விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஆலோசனை செய்த பின்னர் விடுவிக்கப்பட வேண்டிய தண்ணீரின் அளவு, காலம் என்பன குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரு முதலமைச்சர்களும் நேற்று முன்தினம் சென்னையில் பேச்சுக்கள் நடத்திய பின் இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

(இ-3)

## கள்ளச் சாராயம் அருந்திய 11 பேர் மரணம்

பீகாரிலும் ஹரியானாவிலும் நடந்த இரண்டு தனித்தனி சம்பவங்களில் கள்ளச் சாராயம் அருந்திய 11 பேர் இறந்து போனார்கள்.

பீகாரில் பட்னா நகரில் சுல்தான்வெஞ் பகுதியில் வெளிப்படையாக விற்கப்பட்ட கள்ளச் சாராயத்தை அருந்தியதில் 7 பேர் உயிரிழந்தார்கள்.

ஹரியானாவிலும் சிசார் மாவட்டத்தின் புதார்கெடா கிராமத்திலும் நடந்த இதே போன்ற மற்றொரு சம்பவத்தில் 4 பேர் இறந்து போனார்கள். சுமார் 10 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

## தொலைபேசியில் ஒற்று: விசாரிக்க உத்தரவு

### 1 மாதத்தில் அறிக்கை வேண்டுமாம்

புதுடில்லி, ஓக. 7

முன்னாள் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் உட்பட 13 காங்கிரஸ் தலைவர்களின் தொலைபேசிகளை ஒற்றுக் கேட்டதாக தெரிவிக்கப்படும் முறைப்பாடு குறித்து விசாரணை செய்யுமாறு சி. பி. ஐ. உளவு அமைப்புக்கு பிரதமர் தேவகௌடா பணிப்புரை விடுத்துள்ளார்.

இது குறித்து பூரண விசாரணை நடத்தி ஒருமாத காலத்தில் அறிக்கை தருமாறும் அவர் கேட்டுள்ளார்.

இது விடயமாக காங்கிரஸ் தலைவர்கள் கொண்ட குழு ஒன்று பிரதமரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

(இ-3)

## மேகவதி சுவர்ணபுத்திரி பொலீஸில் ஆஜராக மறுப்பு

இந்தோனேஷியாவின் எதிர்க்கட்சியான இந்தோனேஷிய ஜனநாயகக் கட்சியின் தலைவி திருமதி மேகவதி சுவர்ணபுத்திரி விசாரணைக்காக நேற்று முன்தினம் பொலீஸார் முன்ஆஜராக வில்லை.

கடந்த வெள்ளிக் கிழமை அவருக்கு அனுப்பப்பட்ட சமன்ஸ் உரிய முறையில் அனுப்பப்படாததினால் அவர் ஆஜராக முடியாது என்று மேகவதியின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகிக் கூறியிருக்கிறார்.

10 நாள்களுக்கு முன்னர் தலைநகர் ஜகார்த்தாவில் நடந்த கலகங்களில் அவருடைய பங்கு என்ன என்பது குறித்து விசாரிக்கவே அவருக்கு சமன்ஸ் அனுப்பப்பட்டிருந்தது.

(இ-3)

## ஈரான், லிபியாவுக்கு எதிராக அமெரிக்கா கடும் நடவடிக்கை

### எண்ணெய், நிலவாயு கொள்வனவை கட்டுப்படுத்த சட்டம்

வாஷிங்டன், ஓக. 7

ஈரான் அல்லது லிபியாவில் உள்ள எண்ணெய் மற்றும் நிலவாயுத் திட்டங்களில் ஆண்டுக்கு 4 கோடி ஸ்ரேலிங் பவுண் அல்லது அதற்கு மேல் பெறுமதியான பொருள்களில் முதலீடு செய்யும் வெளிநாட்டுக் கம்பனிகள் உட்பட எந்த ஒரு கம்பனி மீதும் தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

### உலக அரங்கில்

இதற்கு வகைசெய்யும் சட்டம் ஒன்றில் அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் நேற்று முன்தினம் கையொப்பமிட்டார்.

உலகில் பயங்கரவாதத்தை தூண்டிவிடும் மிகவும் ஆபத்தான நாடுகள் ஈரானும், லிபியாவும் என்று, இந்த சட்டத்தில் கையொபபம் இட்ட நிகழ்ச்சியில் கிளிண்டன் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், பிரிட்டன் ஆகிய நாடுகள் கண்டித்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் இந்த விடயத்தில் தலையிட்டு அமெரிக்காவின் செயலை நிறுத்த வேண்டும் என்று பிரான்ஸ் கேட்டுள்ளது.

அமெரிக்கா இந்த விடயத்தில் தோல்வியையே தழுவும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

(இ-3)

## புறூண்டியுடனான சகல பாதைகளும் மூடப்பட்டன

நைரோபி, ஓக. 7

புறூண்டியில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தக்கோரி ஆபிரிக்க நாடுகள் புறூண்டி மீது பொருளாதாரத் தடையை விதித்ததை அடுத்து ஆபிரிக்க நாடுகளுக்கும், புறூண்டிக்கும் இடையேயான சகல பாதைகளும் மூடப்பட்டுள்ளன. ரயில், விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டன.

ஏழு ஆபிரிக்க நாடுகள் நடத்திய உச்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியே இந்தப் பொருளாதாரத் தடை கொண்டுவரப்பட்டுள்ளது.

அதே வேளை — புறூண்டியின் எல்லை நாடான கென்யாவும் நேற்று முதல் பொருளாதாரத் தடையை அமுலுக்கு கொண்டுவந்துள்ளதாக அறிவித்துள்ளது

(இ-3)

# முல்லைத்தீவு முகாம் படையினரில் 20 பேர் மட்டுமே மீட்கப்பட்டனர்

## ஏனையோர் நிலை அறிய உறவினர் செஞ்சிலுவைக்குப் படையெடுப்பு

கொழும்பு, ஓக. 7

முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதலுக்குப் பின், முல்லைத்தீவு முகாமில் இருந்த படையினரில் 20 பேர் மட்டுமே தப்பி வந்துள்ளனர் அல்லது மீட்கப்பட்டுள்ளனர். எஞ்சிய படையினர் குறித்து இதுவரை தகவல் எதுவும் இல்லை.

''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

தமது உறவினரின் கதியை அறிவதற்கு முல்லைத்தீவு முகாமில் இருந்த படையினரின் குடும்பங்கள் கொழும்பில் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுடன் தினமும் தொடர்பு கொண்டு வருகின்றன.

தினமும் இப்படியான 20 முறைப்பாடுகளாவது தமக்கு கிடைப்பதாகச் செஞ்சிலுவை சர்வதேசக் குழு தெரிவிக்கிறது.

முகாமில் இருந்த தமது உறவினர் இறந்து விட்டாரா அல்லது புலிகளினால் சிறைக்கைதியாகப் பிடிக்கப்பட்டுள்ளாரா என்பதை அறிவதிலேயே இவர்களில் பலரும் அக்கறை காட்டி வருகின்றனர்.

முல்லைத்தீவு முகாமில் இருந்த படையினரில் எவராவது கைப்பற்றப்பட்டுள்ளனரா எனக் கேட்டு விடுதலைப்புலிகளுக்கு கடிதம் எழுதியதாகவும் ஆனால் இதுவரை அதற்கு பதில் இல்லை என்றும் கொழும்பில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதித் தலைவர் மார்ஸ்வெய்ல் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முகாம் சண்டையின் போது காணாமற்போன படையினரின் பட்டியலைத் தருமாறு இராணுவத்திடமும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கேட்டிருந்தது.

ஆனால் இராணுவத்திடமிருந்தும் அதற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

இப்படி ''சண்டேரைம்ஸ்'' மேலும் தெரிவித்தது.

(இ)

## அடுத்த சில தினங்களில் அறிக்கை வெளிவரும்

கொழும்பு ஓக 7

முல்லைத்தீவு முகாம் தாக்குதல் குறித்து அடுத்த சில தினங்களுக்குள் அரசாங்கம் அறிக்கை ஒன்றை வெளியிடும் என ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் தெரிவிக்கிறது.

முல்லைத் தீவு முகாம் தாக்குதல் இடம்பெற்று இரண்டு வாரங்கள் சென்றும் அரசாங்கம் உண்மை நிலையை வெளியிடத் தவறுவது குறித்து எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் குறை கூறி வந்தன.

முல்லைத்தீவு முகாம் தாக்குதலுக்குப் பின்னர் அனுப்பப்பட்ட மீட்புப் படையினர் முகாம் சென்றடைந்ததும் அது பற்றிய விவரங்களை அரசாங்கம் வெளியிடும் என சபை முதல்வர் ரட்ணசிறி விக்ரமநாயக்கா கடைசியாகத் தெரிவித்திருந்தார்.

எனினும் தற்போது முல்லைத்தீவில் ராணுவம் இல்லை என்பது கண்டறிந்த உண்மை.

இப்படி 'சண்டே ரைம்ஸ்' மேலும் தெரிவித்தது.

(இ)

## தொண்டர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 7

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் நடைபெறவுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க முதலுதவி நிலையத்தில் சேவை செய்யவிருக்கும் தொண்டர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 11 மணிக்கு யாழ் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. [இ 3]

## நுவரெலியா மேயரின் காரை நோக்கிச் சூடு

### கிரனேட்டும் வீசப்பட்டது

கொழும்பு, ஓக. 7

நுவரெலியா மாநகர மேயரும் சட்டத்தரணியுமான திருமதி நளின் திலகா ஹேரத் பயணம் செய்த கார் மீது கடந்த வெள்ளிக் கிழமை மாலை இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு கிரனேட்டும் வீசியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

வலப்பனை நீதிமன்றத்துக்குச் சென்று விட்டு மற்றும் ஐந்து பேருடன் மேயர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே கந்தப்பளை கற்பாலம் என்ற இடத்தில் வைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இனந்தெரியாத நபர்கள் மோட்டார் சைக்கிளில் காரைப் பின்தொடர்ந்து கலைத்துச் சென்று அதனை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அதனால் பின்புறக் கண்ணாடி உட்பட காரின் பல பகுதிகள் சேதமடைந்தன. அதன் பின்னர் காரைநோக்கி அவர்கள் கிரனேட்டும் வீசியதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் கார் வேகமாகச் சென்றதால் கிரனேட் காருக்குள் விழவில்லை.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலீஸார் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து வெடிக்காத கிரனேட் ஒன்றையும் எடுத்துள்ளனர்.

(உ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சணல் விதை விற்பனைக் குண்டு. தொடர்பு:- கே. கே. இராஜேந்திரன், இலுப்பையடிச் சந்திக்கு அருகாமை, 331 (257), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42134)

பாவித்த கண்ணாடி அலுமாரி, புத்தக அலுமாரி, கல் உரல் விற்பனைக்குண்டு. தொடர்பு: எல். குகநாதன் இல. 108, அரசடி வீதி, கந்தர்மடம். (42155)

### மணமகன் தேவை

உயர் குலத்தவரான 25 வயதினரான யாழ் நகர பிரபல கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றும் கத்தாலிக்க மாதுக்கு ஆசிரியராக அல்லது வங்கி கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் மணமகன் தேவை, தொடர்பு: மே/பா. 510, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (42087)

லக்கினத்தில் செவ்வாயுள்ள 33 வயதான குருகுலப் பட்டதாரி ஆசிரியைக்கு அரச, தனியார் நிறுவனங்களில் தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு இல:- 511, மே/பா உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (42141)

### சாக்குகள் விற்பனை

4000 வெற்றுச் சாக்குகளும், 7000 வெற்றுப்பைகளும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. மீளப் பெறக்கூடிய வைப்புப்பணம் ரூபா. 500/- செலுத்தி 15 - 08 - 96ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும். பொதுமுகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி பலநோக்குக கூட்டுறவு சங்கம், நீர்வேலி. (சி/2720)

### சேவை

தட்டெழுத்து வேலைகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு இல: B 418, மண்டுவில் அம்மன் வீதி, ஐயா கடையடி. மீசாலை (42153)

### உதயம் வாடகைக்கு

பீங்கான ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம் (வைற்கவுஸ் அருகில்) 172, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (41870)

### ஆங்கிலப் பரீட்சைகள்

G.A Q., University, ஆங்கில ஆசிரியர் தேர்வு, O/L Distinction, Credit பெறுபேறடைய சற்பிக்கப்படும். B.Sc London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (41777)

**BRISLEES**
**கல்வி நிலையம்**
உடுவில்
(புதிய இடம்)
ஆரம்பம் இன்று
**07-08-96** 3 மணி
**SPOKEN**
with
**GRAMMAR**
**by BRITTO**
(42150)

### O/L DAY CLASSES

1996 DEC. பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்குரிய பகல்நேர வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன விவரங்களுக்கு யுப்பிட்டர் கல்வி நிலையம், சாவகச்சேரி. (சி/2716)

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்
இலங்கை
இராமநாதன்
நுண்கலைக்கழகம்
இசைக்கலை மணி,
நாட்டியக்கலை மணி
பல்கலைக்கழக அனுமதி
1995/96

டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரி 24 - 07 - 1996 உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு மேலதிகமாக 1995 ஆம் ஆண்டு க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் மேற்படி அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவாளர்.
(C/2722)

### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்கி, தபால்வழி ஆரம்பமாகிறது. கடைசித் தகைமை க.பொ.த (சா/த). தற்காலிகமாக, தாமதமாகியிருந்த மாணவரும் தொடர்பு கொள்க: பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா, திரு. வீ. கே. கந்தசாமி, வைரவர் கோவிலடி, "பழமுதிர்ச் சோலை", 20. அச்சக ஒழுங்கை, தலையாழி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42154)

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம் —
இலங்கை
சித்த
வைத்தியத் துறை
புதிய அனுமதி
1994/95

1994/95 கல்வியாண்டுக்கு விண்ணப்பித்த தகுதியுடைய மாணவர்களையும், 26 07-1996 அன்று நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குபே க்குவரத்து மற்றும் காரணங்களால் தோற்ற முடியாத மாணவர்களையும் யாழ்/பல்கலைக்கழக சபையறையில் 16-08-1996 காலை 11-00 மணிக்கு நடைபெறவிருக்கும் நேர்முகப் பரீட்சைக்கு தவறாது தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
(சி/2723)

## பெற்றுக் கொள்ளவும்

பின்வரும் இலக்கங்களையுடைய கார் புத்தகங்களுக்கு உரியவர்கள் உடன் தொடர்பு கொண்டு புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளவும்

EN 8277. 5 ஸ்ரீ 9617.
EN 3094. 11 ஸ்ரீ 2014.
8 ஸ்ரீ 5912. 3 ஸ்ரீ 5565.
2 ஸ்ரீ 9381

திருமதி த. பரமலிங்கம்
[42156]

## அறிவித்தல்

### குகன் ஸ்ருடியோ ஸ்தாபனம்

பொதுமக்கள் வசதி கருதி 2ஆம் குறுக்குத் தெருவில் பருத்தித்துறை தபால் கந்தோருக்கு கிழக்கு முகமாக போகும் றோட்டில் 31-7-96 இல் இடம் மாறியுள்ளது.

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.
(24104)

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

எமது சங்கத்தின் தரம் பிரிக்கப்பட்ட 6,000 வெற்றுச் சாக்குகளும், 9,000 வெற்றுப் பைகளும் உண்டு. அவற்றைப் பெற விரும்புபவர்கள் வைப்புப் பணமாக 500/- ரூபாவைச் கட்டி விண்ணப்பப் பதிரத்தைப் பெற்று 25 08-96 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். தபால் உறையின் இடது பககத்தில் வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம் என குறிப்பிடல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
வலி - கிழககு வ. ப. ப. நோக்கு கூ ச.
அச்சுவேலி.
(சி2721)

## காணவில்லை

05 — 08 — 96 அன்று 10 00 மணியளவில் வெள்ளைநிற முகத்தில் கறுப்பு நிறமும், வளைந்த கொம்புமுடைய யேசி இன மாடு இல. 718, ரெட்ணா கபே ஆஸ்பத்திரி வீதியிலிருந்து மேய்ச்சலிற்காக சென்ற போது காணவில்லை. இதனைப் பற்றிய தகவல்கள் அறிந்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
கு. இராஜேஸ்வரி
718, ரெட்ணா கபே
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(42147)

# மாடிக் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட வெடிச் சத்தம்

## கொள்ளுப்பிட்டியில் பரபரப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 7

கொள்ளுப்பிட்டியில் பிரபல புத்தக நிலையமொன்றுக்கு முன்பாக அமைந்திருக்கும் மாடிக் கட்டடம் ஒன்றில் திங்கள் நண்பகலில் ஏற்பட்ட பாரிய வெடிச் சத்தத்தால் பீதியும், பரபரப்பும் அடைந்த மக்கள் ஆங்காங்கே சிதறி ஓடினர்.

அக் கட்டடத்தில் இருந்து புகை மண்டலம் கிளம்பியதுடன் ஒருவர் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது

அந்த மாடிக்கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த குளிரூட்டி சாதனத்தின் கொம்பிறசர் மின் ஒழுக்கின் காரணமாக வெடித்ததனாலேயே வெடிச்சத்தமும் புகையும் கிளம்பின என்று பின்னர் தெரியவந்தது. (இ-3)

# அமைச்சரின் மூளைக்கு அருகில் குண்டுச் சிதறல்!

கொழும்பு, ஓக. 7

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் தலையின் முன் பகுதிக்குள் குண்டுத் துகள்கள் உள்ளே சென்றிருப்பதாகவும் —

அமைச்சரின் மூளைப் பகுதியிலிருந்து ஒரு மில்லி மீற்றர் மட்டுமே அப்பால் தள்ளியிருக்கும் அக்குண்டுச் சிதறல்கள் பாதிப்பு எதனையும் அவருக்கு ஏற்படுத்த மாட்டா என்றும்

பிரிட்டனில் உள்ள மூன்று பிரதான மருத்துவ ஆலோசகர்கள் கூறியிருக்கின்றனர்.

குண்டுத் தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பிய அமைச்சர் மேற்சிகிச்சைக்காக லண்டன் சென்றிருந்தது தெரிந்ததே.

இரண்டு வார சிகிச்சையின் பின்னர் கடந்த ஞாயிறு மாலை அவர் கொழும்பு திரும்பினார்.

லண்டனில் சிறிய அறுவை சிகிச்சைக்கு தான் உட்படுத்தப்பட்டதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அமைச்சர் தனது நாளாந்த அலுவல்களைக் கவனிக்கலாம் என்றும் பிரிட்டிஷ் டாக்டர்கள் ஆலோசனை கூறியுள்ளனராம். (உ)

# சொனிக் பூம் சத்தமா? பீரங்கி வெடிச் சத்தமா?

## கொழும்பில் ஞாயிறு கேட்டது எது?

கொழும்பு நகரை ஞாயிறு நண்பகல் பெரும்பரபரப்பில் ஆழ்த்திய பாரிய வெடிச் சத்தம இஸ்ரேலில் இருந்து வாங்கப்பட்ட "கபீர்" நவீனரக ஜெட் விமானத்தில் இருந்து வெளியான "சொனிக் பூம்" சத்தமா? அல்லது கொழும்பு முகத்துவாரம் ரங்கல கடற்படை தளத்தில் நவீன ரக பீரங்கி பரிசோதனையின் போது எழுந்த சத்தமா?

ஞாயிறு நண்பகல் 12. 05 மணியளவில் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கேட்ட இப்பெரும் சத்தம் குறித்து விசாரித்த பொழுது இரு வேறு விளக்கங்களே கிடைத்தன.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க இஸ்ரேலில் இருந்த வாங்கப்பட்ட "கபீர்" நவீன ரக ஜெட் விமானத்தில் இருந்து எழுந்த "சொனிக் பூம் சத்தம் அது என்று கூறினார்

கொட்டாஞ்சேனை கரையோர பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்கள், முகத்துவாரம் ரங்கல கடற்படை தளத்தில் நவீனரக பீரங்கி ஒன்றை பரிசோதித்த போது எழுந்த சத்தமே அது என்றார்கள். (உ)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
**கலைப்பீடம்**
முதுதத்துவமாணி
[ M Phil Q ]
தகுதிகாண் பரீட்சை
1994

முதுதத்துவமாணி தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்தவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தற்பொழுது ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முதலில் இரண்டாம் வருடவினாத்தாள்களுக்கான பரீட்சையும், அதன் பின்னர் மூன்றாம் வருடவினாத்தாள்களுக்கான பரீட்சையும், தொடர்ந்து விசேட நான்காம் வருடவினாத்தாள்களுக்கான பரீட்சையும் நடத்தப்படும்.

நேர அட்டவணை மற்றும் பரீட்சை விவரங்களுக்கு பரீட்சைப் பகுதியுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

பதிவாளர்
(சி/2724)

## ஆயுதப் பட்டியல் தணிக்கை

முல்லைத்தீவு வீழ்ச்சியின் போது எடுத்துச் செல்லப்பட்ட ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் தளபாடங்கள் ஆகியவை பற்றிய விரிவான பட்டியல் அடங்கிய செய்தி தணிக்கைக்காக அனுப்பப்பட்ட போது அப்பட்டியல் முற்றாகத் தணிக்கை செய்யப்பட்டதாக ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

அதன் வாராந்த பாதுகாப்புத் துறைத் தகவல்கள் பற்றிய கட்டுரைக்கு மத்தியில் இத் தணிக்கை பற்றிய விபரம் தடித்த எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

## வாதுவ வருகிறது

தனியார் வர்த்தகர்களின் பொருள்களை ஏற்றிக் கொண்டு "வாதுவ" கப்பல் காங்கேசன்துறை நோக்கி சனிக்கிழமை புறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் 3 ஆயிரத்து 800 மெற்றிக்தொன் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன.

இதேவேளை— கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய மண்எண்ணெய், மற்றும் உணவுப் பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து "மாஹோ" கப்பலில் ஏற்றப்படுவதாகவும் —

ஓரிரு தினங்களில் இக்கப்பல் காங்கேசன்துறை நோக்கி புறப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

உதயன்

## தெரிவுக்குழுவின் நாளைய அமர்வு

இனப்பிரச்சினைக்கான அரசின் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு கடந்த சனிக்கிழமையுடன் — ஓகஸ்ட் மூன்றாம் திகதியுடன் — ஒரு வருடம் முடிவடைந்து விட்டது.

உத்தேச தீர்வுத் திட்டம் சட்ட வரைபாக, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஆராய்வுக்குச் சமர்ப்பிக்சப்பட்டு எட்டாவது மாதமாகிறது. தெரிவுக் குழு ஆமை வேகத்தில் நகர்ந்தது தீர்வுத் திட்டத்தின் மிக முக்கிய விடயங்களை நாளைக்குத் தான் பரிசீலனை செய்யப் போகிறது.

இலங்கையின் அரசமைப்பை ஒற்றையாட்சி முறையில் இருந்து ஓரளவான கூட்டாட்சி முறைக்கு மாற்றுவதா இல்லையா என்ற பிரதான அம்சமும் நாளைய தினமே தெரிவுக் குழுவில் ஆராயப்படவுள்ளது.

அரசு சமர்ப்பித்துள்ள தீர்வு யோசனையின் முக்கிய கருவம்சமாக, சர்ச்சைக்குரியதாக விளங்குவது ஒற்றையாட்சி முறையை நீக்குவதேயாகும்.

முறைப்படி, இந்த விடயமே தெரிவுக்குழுவினால் அதன் ஆரம்ப அமர்வுகளில் ஆராயப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்தால் முரண்பாடும், கருத்து மோதலும் உண்டாகி, முதற்கோணி முற்றும் கோணி விடும் என்று அரசு கருதியது.

முரண்பாடு ஏற்பட முடியாத விடயங்களை ஆராய்ந்து, தெரிவுக்குழுவில் ஒரு சுமுக நிலையை உருவாக்கினால், பிரச்சினைக்குரிய ஆட்சிமுறை சம்பந்தமாகவும் கருத்தொற்றுமை உண்டாகும் என்றும் அரசு நம்பியது. இதனை காலம் கடத்தும் தந்திரம் என்று பலரும் கருதினார்கள்.

எப்படியோ அரசின் எதிர்பார்ப்பு சரிவரவில்லை என்றே சொல்லவேண்டும். ஒற்றையாட்சி அரசு முறையை நீக்குவதைத் தான் ஆதரிக்கப் போவதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்து வருகிறது.

ஆனால் ஒற்றையாட்சி முறை இருக்கும் வரை தமிழர்களுக்கு கூடுதல் தன்னாட்சி உரிமைகள் கிடைக்கும் என்பது அர்த்தமற்றது என்ற நிலைப்பாட்டினை தமிழ்க்கட்சிகள் பற்றிக் கொண்டுள்ளன. முஸ்லிம் கட்சிகளும் ஒற்றையாட்சி முறை நீக்கப்பட வேண்டும் என்பதனையே வற்புறுத்துகின்றன.

எனவே நாளைய தெரிவுக் குழுக் கூட்டம், காரசாரமானதாக இருக்கும். அரசாங்கமும் தனது ஓரளவு கூட்டாட்சி என்ற ஆரம்ப நிலைப்பாட்டில் இருந்து மெதுவாக வழுவிக் கொள்வதாகவே தெரிகிறது.

தென்னாபிரிக்காவில் ஒற்றையாட்சியின் கீழ் பிராந்திய சபைகளின் ஒன்றியம் மிகவும் திருப்திகரமாக செயற்பட்டு வருவதாக அமைச்சர் ஜி. எல். பீரிஸ் எடுத்துக் காட்டியிருப்பது —

ஒற்றையாட்சி முறையைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கவே அரசு விரும்புகிறது என்பதனை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

தீர்வுத் திட்ட விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை அரசு கைக்குள் போட்டால் தான், காரியத்தை ஓரளவு ஒப்பேற்றலாம் என்று இருந்த நிலை—

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை இது விடயத்தில் மடக்கி விட்டதோ என்று எண்ணும் நிலையை உருவாக்கி இருக்கிறது எனலாம்.

# முல்லைத் துருப்புகள் பற்றி தகவல்களைத் திரட்ட குழு!

## ஐ. தே. க. நியமித்தது

கொழும்பு, ஓக. 7

முல்லைத்தீவுச் சண்டையில் காணாமல் போனதாகக் கூறப்படும் படையினர் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்காக விசேட குழு ஒன்றை பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. நியமித்திருக்கின்றது

ஐ. தே. க. நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் நேற்று முன் தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடிய போது அங்கு இக்குழு தெரிவு செய்யப்பட்டது

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பி. தயாரத்ன தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில் எம். பிக்களான சரத் அமுனுகம, மகிந்த சமரசிங்க, லக்ஷ்மன் யப்பா, அபேவர்த்தனா, ஜயலத் ஜெயவர்த்தனா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவுத் தாக்குதல் பற்றிய விவகாரம் இக் கூட்டத்தில் ஆராயப்பட்ட போது, முல்லைத்தீவு படைத் தளத்தில் பணிபுரிந்த படையினரின் பெயர்கள் கொண்ட பட்டியல் ஏதும் இல்லை என செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் தமக்குத் தெரிவித்ததாக களுத்துறை மாவட்ட எம். பி. மகிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

முல்லைத்தீவுத் தளத்தில் பணியாற்றியவர்களின் குடும்பத்தவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கும்படி அரசு உத்தரவிட்டிருப்பதால் அதற்காகவேனும் அத்தகைய பெயர்ப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சரத் அமுனுகம கூறினார்.

மேற்படி விடயம் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசேட குழுவை ஐ.தே. கட்சியினருக்கு மட்டும் மட்டுப்படுத்திவிடாமல் அதனை தேசிய அளவில் விரிவுபடுத்த வேண்டும் என்றும் —

அரச தரப்பு உறுப்பினர்களையும் குழுவுக்குள் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றும் -

ஐ. தே. கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு கூறினர்.

இப்போது எதிர்த் தரப்பு உறுப்பினர்களை விட அரச தரப்பு உறுப்பினர்களுக்குத் தான் பிரச்சினைகள் அதிகமாக உள்ளன. எனவே அவர்களையும் குழுவில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் ரணில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பின்னடைவுகள் குறித்து அரசுக்கு முன்கூட்டியே எச்சரித்து, அதன் மூலம் அரசு தனது எதிர் கால யுக்திகளை சீர் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் உதவ முடியும்.

★ நெருக்கடி காலத்தில் எதிர்க்கட்சிகள் விமரிசனம் செய்யக்கூடாது எனச் சிலர் கருதுகின்றார்கள். நல்ல விமரிசனங்கள் தேவையான சீர் திருத்தங்களுக்கு வழிவகுக்கும்

★ பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சிலின் போர்க்கால நடவடிக்கைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் தாம் விதித்துள்ள பத்திரிகைத் தணிக்கையையும் மானிய குறைப்பையும் நியதிப்படுத்த முடியும் என ஜனாதிபதி சந்திரிகா கருதுகின்றார். சந்திரிகாவை சேர்ச்சிலுடனோ பிரபாகரனை ஹிட்லருடனோ ஒப்பிடுவதற்கு இது பொருத்தமான சந்தர்ப்பம் அல்ல.

நாட்டையும் ஜனநாயகத்தையும் பேணிக் காப்பதில் சேர்ச்சில் உறுதியாக இருந்தார்; தொடர்ச்சியான தோல்விகளுக்கு மத்தியிலும் நாட்டில் நம்பிக்கையைக்கட்டி வளர்த்தார்.

ஒவ்வொரு தோல்வி குறித்தும் சட்டசபையில் விரிவாக விவாதிக்கப்பட்டது; மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால் இன்று வரை முல்லைத்தீவு தோல்வியை ஏற்கும் அறிக்கை எதனையும் அரசு விடுக்கவில்லை.

★ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப் படும் போர் என்ற போர்வையிலே அரசு தேசிய தொடர்பு சாதனங்கள் மீது தணிக்கையை மேற்கொள்கிறது.

★ பத்திரிகைகளுக்குவாய்ப் பூட்டுப் போடும் விடயத்தில் படைகளை அரணாக அரசு பயன்படுத்துகின்றது.

★ இராணுவ இரகசியங்கள் பற்றிய செய்திகளுக்கு மட்டுமே பிரிட்டனில் தணிக்கை விதிக்கப்பட்டிருந்தது. ஏனையவை அனைத்தும் சுதந்திரமாகப் பிரசுரிக்கப்பட்டன.

★ சில பத்திரிகைகளை மூடப் போவதாக ஜனாதிபதி விடுத்திருக்கும் எச்சரிக்கை அரசு தன் பக்கச் செய்திகள் மட்டுமே மக்களை எட்ட வேண்டும் என்று விரும்புவதை வெளிப்படுத்துகின்றது.

★ யுத்தத்தை நடத்துவதுதான் இராணுவத்தின் வேலை; பத்திரிகைகளை மூடுவது குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுவதல்ல.

★ பத்திரிகைகள் வெளியிடும் செய்திகள், தகவல்கள் தவறானால் அவை குறித்து நடவடிக்கை எடுக்க சட்ட பூர்வமான வசதிகள் உள்ளன.

★ மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரம் அரசினால் மீறப்படும் போது அதனைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது ஐ. தே. கவின் அத்தியாவசிய கடமையாகும்.

★ போர் சம்பந்தமான உண்மை நிலையை அறியும் உரிமை மக்களுக்கு உண்டு.

★ தனியார் செய்தி நிறுவனங்கள், தொலைக்காட்சி நிலையங்கள் மீது அரசு கைவைத்தால், ஐ தே. கட்சி நாடளாவிய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தும்.

— இவ்வாறு ரணில் மேலும் கூறினார்.

# முல்லைத்தீவுத் தாக்குதல் குறித்து விசாரிக்க இராணுவ நீதிமன்றம்

கொழும்பு, ஓக, 7

முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் இராணுவ நீதிமன்றம் ஒன்றை இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் ரோஹான் தளுவத்த நியமித்திருக்கின்றார்.

எதிர்காலத்தில் இராணுவ முகாம்களை புலிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய உடனடிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்த நீதிமன்றம் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்.

கொழும்புப் பத்திரிகைகள் இத்தகவலை வெளியிட்டன.

மூவரைக் கொண்ட இந்த நீதி மன்றத்தின் ஏனைய இரு உறுப்பினர்களும் சிரேஷ்ட பிரிகேடியர் தரத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தாக்குதலுக்கு இலக்கான முல்லைத்தீவுத் தளம் முல்லைத்தீவு நகரத்தையும் உள்ளடக்கி சுமார் அறுநூறு ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இராணுவத்தை முற்றாக அகற்றும் முயற்சியில் புலிகள் ஆரம்பம் முதலேயே அதிக சிரத்தை எடுத்து வந்துள்ளனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

கொக்காவில், மாங்குளம் உட்பட இப்பகுதியில் அமைக்கப்பட்ட பல இராணுவ முகாம்கள், இராணுவக் காவல் நிலையங்கள் போன்றவை படிப்படியாக புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அமைதிப்படையின் காலத்தில் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதியில் நிலை கொண்டிருந்து தான் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரன் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது

(உ)

## முன்னாள் அமைச்சர்கள் மூவருக்கு நோட்டீஸ்

### பட்டலந்த ஆணைக்குழு அனுப்பியது

கொழும்பு பட்டலந்தப் பகுதியில் சித்திரவதை முகாம் ஒன்று நடத்தப்பட்டதாகக் கூறப்படும் விவகாரங்கள் குறித்து விசாரணை செய்து வரும் பட்டலந்த ஆணைக் குழு முன் ஆஜராகுமாறு முன்னாள் அமைச்சர்கள் மூவருக்கு ஆணைக்குழு நோட்டீஸ் அனுப்ப விருக்கிறது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாச ஆகியோர் ஜனாதிபதிகளாக இருந்த காலத்தில் அமைச்சர்களாக பணியாற்றிய மூவருக்கே நோட்டீஸ் அனுப்பப்படவிருக்கிறது.

காணாமற்போன சப் இன்ஸ்பெக்டர் ரோஹித பிரியதர்சனா உட்பட மற்றும் காணாமல் போன பலர் குறித்தும் இந்த ஆணைக்குழு விசாரிக்கவிருக்கிறது.

பலசிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகளுக்கும் ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பப்படவிருக்கிறது.

ஆணைக்குழு விசாரணைகளின் போது பிரஸ்தாபிக்கப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் தமது சாட்சியங்களை தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவில் முதலாவது அமர்வுகள் பூர்த்தியாகிவிட்டன என்றும் —

அடுத்த அமர்வு ஆரம்பிக்கும் திகதி அறிவிக்கப்படும் என்றும் —

ஆணைக்குழு அறிவித்துள்ளது. (உ-3)

## தியவதன நிலமேயை நீக்குவதற்கு முயற்சி

கொழும்பு, ஓக.7

தம்மை பதவி நீக்கம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தலதா மாளிகையின் தியவதன நிலமேயான நிரஞ்சன் விஜேரத்னா தெரிவித்துள்ளார்.

தமது பதவிக் காலத்தை 5 வருடங்களாக்குவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரப்பட இருப்பதாகவும் அவர் கூறினார்.

இத்தகைய தீர்மானம் ஒன்றில் பௌத்தர்கள் மட்டும் வாக்களித்தால் தாம் அதனை ஏற்றுக் கொள்வதாகவும் —

ஆனால் பௌத்தர் அல்லாதோரும் வாக்களிக்கப் போகிறார்கள் என்றும் — அவர் கூறினார்.

தமக்கு பதவி ஆசை இல்லை என்றும் பதவியில் இருந்து அகற்றப்பட்டாலும் பௌத்தத்துக்கு தொடர்ந்து சேவையாற்றப் போவதாகவும் அவர் கூறினார் என்று சண்டே ரைம்ஸ் ஞாயிறு வார இதழ் தெரிவிக்கிறது. (இ)

## பயிற்சி வகுப்பு

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆங்கிலப்பாட ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8–30 மணி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (இ-152)

# வெளியூர்களுக்கு விமானம் மூலம் தபால்

### இன்று முதல் புதிய சேவை

யாழ்ப்பாணம், ஓக. 7

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும் மற்றும் வெளியூர்களுக்குமான விமான தபால் சேவை ஒன்று இன்று ஆரம்பமாகவிருக்கிறது என்று பிரதம தபாலதிபர் திரு. சு. கோமலேஸ்வரன் தெரிவித்தார்.

வாரத்தில் ஆகக்குறைந்தது மூன்று தடவைகள் இச்சேவை நடத்தப்படும் என்றும்—

மேலதிக கட்டணம் இன்றி சாதாரண தபால் கட்டணமாக 2 ரூபா முத்திரையுடன் பாரமில்லாத தபால்கள் இச்சேவையில் அனுப்பப்படும் என்றும் — அவர் தெரிவித்தார்.

இச்சேவையில் அனுப்பப்படும் தபால்களுக்கு மேலதிக கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது என்றும் அவர் கூறினார்.

(இ 3)

**முல்லை...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையை அரசால் உடனடியாக வெளியிட முடியாது என்பதும், அதற்கு அரசு ஒரு வருடம் காத்திருக்க வேண்டும் என்பதும் உண்மையே.

ஆகவே முல்லைத்தீவில் பிழையாகப் போனது என்ன? இது பற்றிய முழு அறிக்கையையும் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கையையும் அரசு ஆகக்குறைந்தது ஒரு வருடம் கழித்தேனும் வெளியிடும் என நம்புவோமாக!

**தளபதி குழம்பியிருப்பார்**

இந்த விடயம் எல்லோரையும் விட இராணுவத் தளபதி றோஹான் தலுவத்தையின் மனதைக் குழப்புவதாக இருக்கும் என்பது கண்கூடு.

வடக்கில் முழு இராணுவச் செயற்பாட்டுக்குமான தளபதி என்ற முறையில் அவர் புரிந்த சாதனைகளை முல்லைத்தீவு வீழ்ச்சி முற்றாக மறைத்து விடுவதாக உள்ளது. இந்த இராணுவப் பின்னடைவுக்கு அவர் மீது மட்டும் தானா குறை கூற வேண்டும்?

இது பற்றி யாரேனும் அவரிடம் கேட்டால், அந்தநேரத்தில் அதிகாரிகளிடம் தான சமர்ப்பித்த அறிக்கையை இராணுவத் தளபதி முன் வைப்பார்.

தாக்குதல் இலக்காகக் கூடிய ஆபத்தான இடத்தில் முல்லைத்தீவு முகாம் இருப்பதாலும் —

பெரும் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டால் பின் வாங்கிச் செல்வதற்கான நிலை ஏதும் அங்கு இல்லை என்பதாலும் —

முல்லைத்தீவு முகாம் வாபஸ் பெறப்பட்டிருக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தளபதி தெரிவித்திருந்தார்.

இந்த வீழ்ச்சிக்கு இராணுவ கூட்டுச் செயற்பாட்டின்மையும் காரணம் என்று தற்போதைய நிலைமைகள் வெளிப்படுத்துகின்றன.

தாங்கள் என்ன நடவடிக்கைகளை எடுப்பது என்பது குறித்து படைத் தளபதிகளிடையே முரண்பாடு காணப்பட்டது என்பது தெரிகிறது.

அதனால் இந்தச் சூழ் நிலையில் கூட்டு நடவடிக்கை கட்டளைப் பீடத்தை மீண்டும் ஸ்தாபிக்க வேண்டும் என சில உயர் மட்டப் படை அதிகாரிகள் யோசனை கூறியிருக்கின்றார்கள்.

இராணுவ கூட்டுச் செயற்பாட்டின் அவசியத்தையும்' —

கூட்டு நடவடிக்கை கட்டளைப்பீடத்துக்கு இராணுவ அதிகாரி ஒருவரே தலைவராகச் செயற்பட வேண்டும்; அரசியல் நோக்கத்தை நாடுகின்ற ஒருவர் அல்ல என்பதையும் —

ரணில் விக்கிரமசிங்காவும் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருக்கின்றார். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## ஆசிரியர் இடமாற்றப் படிவம்

1996 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றத்துக்குரிய விண்ணப்பப் படிவம் வெளியாகி உள்ளது.

மாதிரிப் படிவத்தை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

## கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பேத்தாளை என்ற இடத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பத்துப் பேர் அவர்களது ஆறு படகுகளுடன் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

---

**நொச்சிமோட்டை...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைத்துள்ளனர் என்றும் —

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளைப் பிரமுகர்கள் புலிகளின் சடலங்களை ஓமந்தையில் வைத்து புலிகளிடம் ஒப்படைத்தனர் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ- 3)

---

**அகதிகளை..**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர் ஒருவர் பி.பி.ஸிக்கு தெரிவித்தார்

அதே சமயம், கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்த அகதிகளில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வவுனியாவில் படையினரால் விடுவிக்கப்படாத பகுதியான தம்பனையை வந்தடைந்திருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன. (இ-3-5)

---

**உணவுலொறிகளுக்கு.**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து இடம் பெயர்ந்த சுமார் 2 லட்சம் மக்களிடையே உணவுத் தட்டுப்பாடு நிலை காணப்படுவதாக நிவாரணப் பணியாளர்கள் எச்சரிக்கின்றனர் என்று பி.பி.ஸி. நேற்று இரவு தெரிவித்தது.

கிளிநொச்சியில் உணவு மற்றும் குடி தண்ணீர் விநியோகங்கள் தீர்ந்து கொண்டிருக்கின்றன என்றும் —

வடபகுதிக்கான வழக்கமான உணவு மற்றும் மருந்து வகைகள் எடுத்துச் செல்லும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதாகம் தெரிவித்துளளது

---

**இதுவரை..**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தன.

இச்சம்பவம் குறித்து விசாரணைகள் விரிவான முறையில் நடைபெறுவதாகவும் —

பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

(2 ஆம் பக்கமும் பார்க்க)

(இ-5)

---

### அவசர காலச் சட்டம் நீடிப்பு:

# நாடாளுமன்ற விவாதம் இன்று சூடு பறக்கும்

கொழும்பு, ஓக. 7

முல்லைத்தீவுத் தாக்குதல், கிளிநொச்சி இராணுவ நடவடிக்கை ஆகியவை சம்பந்தமான — பாதுகாப்புத் துறையுடன் தொடர்புடைய — செய்திகள் பரவலாக அடிபட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சூழ் நிலையில் —

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை மீது இன்று நாடாளுமன்றத்தில் விவாதம் ஆரம்பமாகவிருக்கின்றது

தற்போதைய நெருக்கடியான சூழ் நிலையில் இந்த விவாதம சூடு பறக்கும் ஒன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது

வழமையாக அவசர காலச் சட்ட பிரேரணை மீதான விவாதம் ஒரு முழு நாள் மட்டுமே இடம்பெறுவது நடைமுறை ஆனால் இம்முறை விவாதம் ஒன்றரை நாட்கள் நடைபெறவிருக்கின்றது.

மொத்தம் 12 மணி நேரம் பிரேரணை மீதான விவாதம் நடக்கும். அரசுத் தரப்புக்கு ஐந்து மணித்தியாலங்களும் எதிர்க் கட்சிகளுக்கு ஏழு மணித்தியாலங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இன்றைய விவாதம் சூடு பறப்பதாக இருந்தாலும் பத்திரிகையாளர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்ற அலுவலர்களையும் தவிர வேறு எவருக்கும் அதனைப் பார்க்க வாய்ப்புக் கிட்டாது. ஏனெனில் நாடாளுமன்றக் கலரி பொது மக்களுக்குப் பூட்டப்பட்டிருக்கும்.

இந்த விவாதத்தில் எதிரணித் தரப்பின் முக்கிய பேச்சாளராக அனுரா பண்டாரநாயக்கா இருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமது மாமனாரும் பாதுகாப்புப் பிரதி அமைச்சருமான அனுருத்த ரத்வத்தையை அண்மையில் கண்டியில் நடைபெற்ற ஐ.தே.கவின் பொதுக் கூட்டத்தில் கடுமையாகத் தாக்கிப் பேசியதன் மூலம் தற்போது ப்ரபரப்பை ஏற்படுத்தியிருப்பவர் அனுரா.

அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான அனுராவின் உரையும் பரபரப்பை ஏற்படுத்துவதாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

(உ)

---

**புலிகளுடன் ...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காமர் புலிகள் பற்றியும் சமாதான முயற்சிகள் பற்றியும் கேட்கப்பட்ட போது 'அவர்களை எம்மால் ஒதுக்கிவிட முடியாது' என்று தெரிவித்தார்.

இவை அரசு தனது முன்னைய கடும் போக்கு நிலையை மாற்றி பேச்சு மூலமான தீர்வு பற்றி புலிகளுடன் உரையாட விரும்புவது குறித்து மீண்டும் ஆலோசிக்கின்றது என்பதற்கு தெளிவான சமிக்ஞைகளாகும். — இவ்வாறு அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

---

**கிளிநொச்சியை ...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

புலிகளின் கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் போன்றவை காரணமாக படையினர் தமது முன்னேற்றத்திலும் நகர்விலும் மிகவும் அவதானமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

இலங்கை விமானப் படை விமானங்கள் புலிகள் நிலை கொண்டுள்ள இடங்களை அடையாளம் கண்டு தாக்கி அழிப்பதில் ஈடுபட்டிருப்பதாகவும் —

படையினர் முன்னேறுவதற்கு வசதியாக — படை நகர்வுக்கு முன்பாக — புலிகளின் தாக்குதல் வரக் கூடிய இடங்களை நோக்கிப் பீரங்கி, கவச வாகனப் படையினர் தாக்குதல் நடத்துவதாகவும் நடவடிக்கைத் தலைமையகச் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

நேற்று முன்தினம் நடந்த சண்டையில் இரு அதிகாரிகளும் 15 படையினரும் உயிரிழந்தனர் என்றும் —

மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் —

அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நேற்றைய சண்டையில் தாக்கப்பட்ட ஒரு டாங்கியுடன் இதுவரை ஆறு டாங்கிகளைத் தாங்கள் செயல் இழக்கச் செய்திருப்பதாகவும் —

படைகளின் நகர்வைத் தடுத்து நிறுத்தியிருப்பதாகவும் —

புலிகளின் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (உ-3-5-10)

---

## கிளிநொச்சி அரச அதிபரும் இடம்பெயர்ந்துள்ளார்.....!

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் சண்டையினால் அப்பகுதி மக்கள் மட்டும் இடம்பெயரவில்லை —

மாவட்டத்தின் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான எஸ் தில்லை நடராஜாவும் இடம்பெயர்ந்திருக்கின்றார்.

அவர் அக்கராயன்குளம் பகுதியில் உள்ள கிராமசேவையாளர் ஒருவரின் இல்லத்தில் புகலிடம் தேடியுள்ளார்.

சம்பந்தப்பட்ட கிராமசேவையாளரின் இல்லத்தில் 80பேர் தங்கியிருக்கிறார்கள் இப்பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு அகதி முகாமாகியுள்ளது.

கிளிநொச்சியின் நிர்வாகக் கட்டமைப்பு முற்றாகச் சீர்குலைந்துள்ளது. நகரின் சுற்றுப்புறங்களில் கூட மனித நடமாட்டம் இல்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(அ)

## ராவ் பயன்படுத்திய ராணுவ விமானங்கள்

### நீதிமன்று விளக்கம் கோருகிறது

கடந்த இந்திய தேர்தலின் போது முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் தேர்தல் விதிமுறைகளுக்கு புறம்பாக, தேர்தல் பிரசாரத்துக்காக இராணுவ விமானங்களைப் பயன்படுத்தியது குறித்து விளக்கம் கேட்டு புதுடில்லி நீதிமன்றம் மத்திய அரசுக்கு அறிவித்தல் அனுப்பியுள்ளது

தேசிய விடுதலை அமைப்பின் தலைவர் ரவீந்திரகுமார் தொடர்ந்த வழக்கில் நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்தது.

இராணுவ விமானங்களைப் பாவித்த செலவாக, நரசிம்மராவ் 3 கோடியே 80 லட்சம் ரூபாவை பாதுகாப்பு அமைச்சுக்கு செலுத்த வேண்டும் என்றும் —

இதனைச் செலுத்த முடியாவிட்டால் அவர் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்றும் — தேசிய விடுதலை அமைப்பின் தலைவரின் மனுவில் கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஜெயலலிதா செலவிட்ட அளவுக்கதிக பணம்

### திருப்பி அறவிட நடவடிக்கை

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆட்சியிலிருந்த போது வீட்டுப் பராமரிப்புச் செலவுக்காக அவர் அளவுக்கு அதிகமாகச் செலவு செய்த பணத்தை திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்றுச் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிகள் மற்றும் நிர்வாகம் குறித்த துறைகளுக்கான மானியம் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்துக்கு பதிலளித்து முதலமைச்சர் பேசினார்.

கடந்த ஐந்தாண்டுகளில் செல்வி ஜெயலலிதா வீட்டுப் பராமரிப்புச் செலவுக்காக 35 இலட்சம் ரூபாவும் —

தொலைபேசிச் செலவுக்காக சுமார் 36 இலட்சம் ரூபாவும் —

பிரயாணத்துக்காக சுமார் 3 கோடி ரூபாவுக்கு அதிகமாகவும் — செலவழித்திருப்பதாக முதலமைச்சர் பல்வேறு புள்ளி விவரங்களுடன் அவையில் தெரிவித்தார்.

தான் முதலமைச்சராக இருந்த இரண்டு ஆண்டுகளில் வீட்டுப் பராமரிப்புக்காக ஒரு இலட்சத்து 46 ஆயிரம் ரூபா மட்டுமே செலவானதாகவும் அவர் குறிப்பிட்டார். (இ-5)

## கருங்கால் நோய் தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள்

நாயன்மார்கட்டு, அரியாலைப் பகுதிகளில் உள்ள மூன்று வயதிற்கு உட்பட்ட மாடுகளுக்கு கருங்கால் நோய் தடுப்பூசி ஏற்றப்பட உள்ளது என யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

நாளை 8 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை நாயன்மார்கட்டு சனசமூகநிலையம் —

நாளை மறுதினம் காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை காந்தி சனசமூக நிலையம், அரியாலை. (இ)

---


## மரண அறிவித்தல்

திருமதி
**பொன்னம்மா கதிரவேற்பிள்ளை**

துன்னாலை வடக்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா கதிரவேற்பிள்ளை 4-8-96 காலமாகி விட்டார்.

இவர் கதிரவேற்பிள்ளையின் மனைவியும், இந்திராதேவி, ரவிச்சந்திரன், சந்திராதேவி, சிவச்சந்திரன், அருள்ச்சந்திரன் ஆகியோரின் தாயாரும், அருணகிரிநாதன், சர்வநாயகி, சிவமதி ஆகியோரின் மாமியாரும் ரபிக்காந், ரதினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியை 4-8-96 அன்று நடைபெற்றது.

தகவல்:-
க. சிவச்சந்திரன்

துன்னாலை. (42149)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 07-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.